சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**<u>ஆணை நாள் 08.05.2026</u>**

<u>முன்னிலை</u>

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**<u>வழக்கு எண். SA 2204/E/2024</u>**

திரு.க.சக்திவேல்சாமி -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி ஆணையர், வருவாய் நிர்வாகம்
மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம், சேப்பாக்கம்,
சென்னை- 600 005. — பொது அதிகார அமைப்பு

******

## <u>ஆணை</u>

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 17.02.2024 அன்று நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு, பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், பொதுத் தகவல் அலுவலர் திருமதி.அல்லி, உதவி ஆணையர்-VI, வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை அவர்கள் இவ்வாணையத்தில் இவ்வாணையத்தில் 21.04.2026-ல் நேரில் ஆஜராகி 20.04.2026 தேதியிட்ட அறிக்கையினை சமர்ப்பித்தார்.

2. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், 17.02.2026 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவின்படி, இவ்வழக்கில் மனுதாரரர் கோரியுள்ள தகவல்கள், பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்), தென்காசி அவர்களின் 16.04.2026 தேதியிட்ட கடிதம் வாயிலாக பெறப்பட்ட தகவல்களானது, பொதுத் தகவல் அலுவலர்/ உதவி ஆணையர்-VI, வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை அவர்களின் வ.நி.7(2)/T/281/2026, நாள் 18.04.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதை ஆணையம் பதிவு செய்கிறது.

3. மேலும், 17.02.2026 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவின்படி, பொதுத் தகவல் அலுவலர் திரு.க.சேதுராமலிங்கம், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), தென்காசி அவர்கள் சார்பு திரு.V.கார்த்திகேயன், தலைமை நில அளவையர், கடையநல்லூர் வட்டாட்சியர் அலுவலகம் அவர்கள் இவ்வாணையத்தில் 08.05.2026-ல் நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பித்தார்.

4. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல்களுக்கான இனம் வாரியான தகவல் பொதுத்

தகவல் அலுவலர் மற்றும் வட்டத் துணை ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், கடையநல்லூர் அவர்களின் கடித ந.க.ஆ3/402/2026, நாள் 15.04.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும், தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், புளியங்குடி நகரம் வார்டு-E, பிளாக்-6 புல எண்.166-ல் ஆவணத்தின் அடிப்படையில் பரப்பு திருத்தம் செய்யக் கோரி திரு.சக்திவேல்சாமி என்பவர் தனது முகவர் திரு.செல்வக்குமார் எனபவருக்காக தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கோரியதாகவும், மேற்படி பரப்பு திருத்தம் தொடர்பாக மனுதாரர் அளித்த மனுவின் அடிப்படையில், தென்காசி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் ந.மு.ஐ1/5937/2023, நாள் 16.03.2024-ன்படி பரப்பு திருத்தம் செய்யப்பட்டு, மனுதாரருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும், மனுதாரர் சக்திவேல்சாமி தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவும், தென்காசி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் நடவடிக்கை எடுத்து உத்தரவு பிறப்பிக்கப்பட்ட மனுவும் ஒரே கோரிக்கை தொடர்பானது எனவும் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

5. எனவே, **பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), தென்காசி அவர்கள்**, இவ்வாணை கிடைக்கப்பெற்றவுடன், இவ்வழக்கில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள பரப்பு திருத்தம் தொடர்பான மனுதாரர் மனு மீது நாளதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த முழுக்கோப்பின் நகல்களை, கட்டணம் ஏதுமின்றி, அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பத்துடன், ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல் அல்லது அஞ்சல் துறையின் இணையதள அறிக்கையின் நகல் (Online Tracking Consignment) மற்றும் வழங்கப்பட்ட தகவல் குறித்த அறிக்கையின் நகலினை **இவ்வாணையத்தில் 05.06.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியின் நேர்முக உதவியாளர் (பொது/ நிலம்), மாவட்ட ஆட்சியரகம், தென்காசி அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.**

**ஓம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 2204/E/2024**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/ உதவி ஆணையர்-VI,
வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை
ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை- 600 005.

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது/ நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தென்காசி மாவட்டம்- 627 811.

**மேல்முறையீட்டாளர்**

திரு.க.சக்திவேல்சாமி, த/பெ.A.Ganapathiappanadar,
89, Arasady Vinayagar Kovil Street,
T.N.Pudugudi, Puliangudi,
Tenkasi District - 627 855.

Copy to: File MP/PA,